**பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர் : திரு.திவெங்கடேஷ்.ந., இ.ஆ.ப.,**

**செ.மு.எண்:அ5/122/2023** **நாள்: 04.04.2024**

பொருள்: பொதுப்பணி – பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை–5 கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.த.ராஜ்குமார் என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. மதுரை கள்ளர் சீரமைப்பு மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறை ஆணை எண்.எச்.13/11633/06, நாள்.14.08.2006.
2. அரசாணை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள். 01.02.2016.
3. அரசாணை(நிலை) எண்.62, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை, நாள்.26.08.2020.
4. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.அ2/2922/2012, நாள்.12.08.2021.
5. மதுரை, கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநரின் கடித ந.க.எண்.எச்.7/13116/2011, நாள்.30.12.2022.
6. அரசாணை எண்.33, தொழிலாளர் நலன் (ம) திறன்வளர் மேம்பாட்டுத்துறை நாள். 08.03.2023.

**ஆணை**

மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், மேலக்கால் அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணியில் இருந்த போது 10.11.1995 அன்று இறந்த திரு.S.தனுஷ்கோடி என்பவரது மகன் திரு.த.ராஜ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பார்வை 2–ல் படிக்கப்பட்ட செயல்முறையின் மூலம் உத்தரவிடப்பட்டது.

2) திரு.த.ராஜ்குமார் என்பவரின் பிறந்த நாள்.22.07.1973, தனியர் பணியில் சேர்ந்த நாள்.25.08.2006 அன்று தனியரின் வயது 33 வருடம் மற்றும் தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே, தனியர் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதிகளின்படி இளநிலை உதவியாளருக்குரிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைப் பெற்றிருப்பதால் வயது மற்றும் கல்வித்தகுதிகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை. மேலும், தனியரின் கல்வி சான்றிதழ்கள் அரசுத் தேர்வுத் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டு, மெய்தன்மை உடையவை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

3) கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசுப் பணியாளர்கன் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்திற்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் , விதி 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களது பணிவரன்முறை செய்திட கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என பார்வை 2–இல் காணும் அரசாணையில் கீழ்க்கண்ட பத்திகளில் ஆணையிடப்பட்டுள்ளது.

**பத்தி எண்.(6.1):**

1.2.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணிநியமனமும் இதன் மூலம் வரன்முறைப் படுத்தப்படுகிறது.

பத்தி எண். (6.2):

மேலே பத்தி 6.1இல் உள்ள ஆணையினை செயல்படுத்த **சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (appointing authority)** அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

4) எனவே, திரு.த.ராஜ்குமார் என்பவருக்கு, பார்வை 2 ல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் 6-ல் படிக்கப்பட்ட அரசாணையின் பிற்சேர்க்கை அறிவிப்பு எண் 16 மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணிவிதிகளில் விதி எண் 10 பிற்சேர்க்கை (II) ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படியும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதிகளின்படி இளநிலை உதவியாளருக்குரிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைப் பெற்றிருப்பதால் வயது மற்றும் கல்வித்தகுதிகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை என்பதால் , மேற்படி தனியரை தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 25.08.2006 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

5) பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து, நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு தனியர் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத்தொகைகள் ஏதேனும் இருப்பின் அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார் என்றும் ஆணையிடப்படுகிறது. மேலும், பணிவரன்முறை செய்யப்பட்டதை, தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு, மதுரை, கள்ளர் சீரமைப்பு, இணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6) தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் விதி எண்.32-ன்படி, இவர் மூன்றாண்டு தொடர்பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்.

ஒம்/-xxxxx
**பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்**

**பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்காக**

பெறுநர்
திரு.த.ராஜ்குமார்,
இளநிலை உதவியாளர்,
அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி,
முத்துப்பட்டி ............................................................ உரிய வழிமுறையாக
மதுரை மாவட்டம்.

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது**

அரசு செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

**நகல்**

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை –
2. இணை இயக்குநர், கள்ளர் சீரமைப்பு, மதுரை-20
3. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம், மதுரை.
4. தலைமை ஆசிரியர், அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி, முத்துப்பட்டி, மதுரை மாவட்டம்.
5. அ5 – இருப்பு கோப்பு